பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 02 2025 **SUNDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் கோப்பையை இந்தியா வென்றுள்ளது.

2. ஏழை, இளையோர், விவசாயிகள் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்காக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் மத்திய பட்ஜெட் அமைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள வரிச்சலுகைகள் வளர்ச்சிக்கு கூடுதல் உத்வேகம் அளிக்கும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

4. விண்வெளி ஆய்வுப்பணிகளுக்காக மத்திய பட்ஜெட்டில் 13 ஆயிரத்து 415 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு நாராயணன் கூறியுள்ளார்.

5. சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 506 கோடி ரூபாயை எட்டியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் கோப்பையை இந்தியா வென்றுள்ளது.

கோலாலம்பூரில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியா ஒன்பது விக்கெட் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவை வென்றது.

*(சவுண்ட் பைட் - வெற்றித்தருணம் - 29 செகண்ட்ஸ்)*

இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா, தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 82 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

**Gongadi Trisha** அபாரமாக பந்துவீசி மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

83 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா, 11 புள்ளி இரண்டு ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 84 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இதன்மூலம், தொடர்ந்து இரண்டாவது முறையாக இந்திய மகளிர் அணி கோப்பையை வென்றுள்ளது.

உலகக்கோப்பையை வென்ற இந்திய மகளிர் அணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், கூட்டு முயற்சி மற்றும் உறுதியான செயல்பாடுகளுக்கு கிடைத்த வெற்றி இது என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகக்கோப்பையை வென்றது தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக இந்திய அணியில் இடம்பெற்ற தமிழகத்தை சேர்ந்த கமலினியின் தாய் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - கமலினி தாய் - 27 செகண்ட்ஸ்)*

**<<<<<<<>>>>>**

ஏழை, இளையோர், விவசாயிகள் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்காக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் மத்திய பட்ஜெட் அமைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று தில்லியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நடுத்தர வர்கத்தினர் பயன்பெறும் வகையில் முதல் முறையாக வருமான வரி விலக்கிற்கான உச்சவரம்பு அதிக அளவு உயர்த்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஏழு லட்சம் ரூபாயிலிருந்து, 12 லட்சமாக உயர்த்தியுள்ளது வரலாற்று சிறப்புமிக்க முடிவு என்று நடுத்தர வர்க்கத்தினர் கருதுவதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<<>>>>>

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள வரிச்சலுகைகள் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு கூடுதல் உத்வேகம் அளிக்கும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், வரிச்சலுகைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதில் பிரதமர் உறுதியுடன் இருந்ததாக தெரிவித்தார்.

நாட்டின் நிதிநிலைமை வலுவாக உள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<<<>>>>>

அனைவரும் பயன்பெறும் வகையில் மத்திய பட்ஜெட் அமைந்துள்ளதாக கல்வித்துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதை இந்த பட்ஜெட் எளிதாக்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இளையோர் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றிருந்ததாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கல்வித்துறைக்கு ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 650 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும், இது நடப்பு நிதியாண்டை விட ஆறு புள்ளி இரண்டு இரண்டு சதவீதம் அதிகமாகும் எனறும் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

மத்திய பட்ஜெட்டில் விண்வெளி ஆய்வுப்பணிகளுக்காக 13 ஆயிரத்து 415 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு நாராயணன் கூறியுள்ளார்.

இன்று நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இஸ்ரோவின் சாதனைகள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளதாக குறிப்பிட்டார்.

*(சவுண்ட் பைட் - நாராயணன் - 27 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 506 கோடி ரூபாயை எட்டியதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது கடந்த ஆண்டு இதேகாலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில், 12 புள்ளி மூன்று சதவீதம் அதிகமாகும் எனறு மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>

திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் இந்து விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அறுபடை வீடுகளில் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் கந்தர் மலையை சிக்கந்தர் மலையாக மாற்ற ஒரு தரப்பினர் முயன்று வருவதாக குறை கூறியுள்ளார்.

திருப்பரங்குன்றம் மலையில் காசி விஸ்வநாதர் கோவில் உள்ளது என்றும், பழனியாண்டர் கோவில் மலைப்பாதை வழியாக காலம் காலமாக காசி விஸ்வநாதர் கோவிலுக்கு வேல் எடுத்துச்செல்லப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், அங்கு ஆடு பலிகொடுக்க சென்ற நபர்களால் பிரச்சினை ஏற்பட்டதையடுத்து, ராமநாதபுரம் மக்களவைத் தொகுதி உறுப்பினர் திரு நவாஸ்கனி, பிரியாணியை கொண்டு சென்று சாப்பிட்டு மலையின் புனிதத்தை கெடுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தமிழ் கடவுளான முருகப்பெருமானை இழிவுபடுத்தும் செயலாகும் என்றும், இந்துக்களின் வழிபாட்டு உரிமையையும், மரபுகளையும் பறிக்கும் செயல் என்றும் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

ராமநாதபுரம் மாவட்டத்தில் சர்வதேச தரத்தில் நீர் விளையாட்டுப்போட்டிகளுக்கான பயிற்சி மையம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் திறக்கப்படும் என்று துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்த மையம் அமையவுள்ள பிரப்பன்வலசை கடற்கரை பகுதியில் அதற்கான பணிகளை இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

42 கோடி ரூபாய் செலவில் இந்த மையம் அமைக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவாரூர் மாவட்டம் சேரி கிராமத்தில் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்ல புதிய கட்டிட பணிகளை மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா இன்று தொடங்கிவைத்தார்.

---------------

சேலம் மாவட்டம் வெள்ளாள குண்டம் ஏரி பகுதியில் உள்ள அருள்மிகு ஶ்ரீராஜலிங்கேஸ்வரர் சுவாமி ஆலய கும்பாபிஷேக விழா இன்று சிறப்பாக நடைபெற்றது.

--------------

நாமக்கல் அருகே உள்ள மருதகாளியம்மன் திருக்கோவில் குடமுழுக்கு விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

-----------------

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் உள்ள அண்ணா விளையாட்டு அரங்கில் இன்று நடைபெற்ற நடசாரி சிலம்பப்போட்டியில் 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இந்தியா - இங்கிலாந்து இடையேயான ஐந்தாவது மற்றும் இறுதி டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரை 3-1 என்ற ஆட்டக்கணக்கில் இந்தியா கைப்பற்றியுள்ளது.

-------------

ஈரான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் இஷான் பட்நாகர் - ஸ்ரீநிதி நாராயணன் இணை பட்டம் வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 16-21, 21-17, 21-14 என்ற செட் கணக்கில், துருக்கியின் **Yasemen Bektas – Emre Sonmez** இணையை வென்றது.

--------------

தேசிய விளையாட்டுப்போட்டியில் தமிழக அணி இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

உத்தராகண்டில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் கூடைப்பந்து இறுதியாட்டத்தில் தமிழக அணி 79-46 என்ற புள்ளிக்கணக்கில் கேரள அணியை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

ஸ்குவாஷ் போட்டியின் மகளிர் பிரிவில் தமிழகம் வெள்ளிப்பதக்கத்தை வென்றது.

<<<<<<<END>>>>>